உ
சிவமயம்



# நல்லூர் முருகன் பாமலர்த் திரட்டு

நல்லூர் சங்கிலி மன்னன் வீதியைச் சார்ந்த

## கந்தையா பாலசுந்தரம்

(பொன்னரியம்)

# நினைவு


வெளியீடு:

ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தல் நிர்வாகிகள்

நல்லூர் - யாழ்ப்பாணம்.

28-4-1987

# அமரர் கந்தையா பாலசுந்தரம்



(பொன்னரியம்)

தோற்றம்: 17-07-35 மறைவு: 30-03-87

உ
சிவமயம்

# திரு. கந்தையா பாலசுந்தரம் அவர்கள்
## (பொன்னரியம்)
## வாழ்வும் வற்றாத பணியும்

திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேள் பெருமானை
இருவாலக் குயத்தியரோ டின்பமுற்றார் அம்மானை
இருவாலக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க அம்மான்

கலியுக வரதனாகிய கந்தசுவாமியார் கோவில் கொண்டருளியுள்ளதும்; தொல்புகழ் தமிழ் மன்னர்களின் இராசதானியாயிருந்ததும் நல்லவர்கள், பெரியவர்கள், நாவலர், சித்தர், ஞானியர் வாழ்ந்த பெருமை மிக்கதுமான யாழ்ப்பாணத்து நல்லூரிலே சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா கந்தையா என்ற உத்தமர் உரும்பராயைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்லையா தெய்வானைப்பிள்ளை என்னும் மாது சிரோமணியைத் தலைக்கூடி இல்லறத்தில் நல்லறம் ஆற்றி வாழ்ந்தனர். இவர்கள் குலம் விளங்க பரமசாமி, பாலசுந்தரம், பாலசிங்கம், லீலாவதி, சிவபாக்கியம், (இலங்கா) சரஸ்வதி என்னும் நன்மக்களைப் பெற்றனர். ஆண்கள் மூவரும் பரமசாமி பவளராணியையும், பாலசுந்தரம் செல்வராஜேஸ்வரியையும், பாலசிங்கம் லோகேந்திரராணியையும் பெண்கள் மூவர் லீலாவதி சிவராசா அவர்களையும் சிவபாக்கியம் (இலங்கா) சிவராமலிங்கம் அவர்களையும் சரஸ்வதி இராமநாதன் அவர்களையும் மணம்புரிந்தனர்.

திரு. பொன்னையா கந்தையாவுக்கும் செல்லையா தெய்வானைப் பிள்ளைக்கும் இரண்டாவது மைந்தனாக 17-7-1935ல் பிறந்தவரே பாலசுந்தரம் என்பவர். குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் இவரது குணம் செயல்கள் என்பன "பொன்னைப் புடம் போட்டு எடுத்த தங்கம் போன்று" மிளிர்ந்தமையால் இவரைப் "பொன்னரியம்" எனச் சிறப்பாகவும் சீராகவும் செல்லமாகவும் அழைத்துவந்தனர். அன்றும் இன்றும் பொன்னரியம் என்னும் பெயராலேயே எல்லோரும் அழைத்தனர்.

பாலசுந்தரம் தனது கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்றுத் தேறினார். 23-1-1957ல் இலங்கை அரசினரின் நகர்காவலர்

படையில் சேர்ந்து நாட்டிற்கும் மக்களுக்கும் நற்சேவை செய்தார். அதன்பின்னர் கூட்டுறவுச் சங்கக்கடையில் முகாமையாளராகச் சேர்ந்து உழைக்கத் தொடங்கினர்.

பொன்னரியம் தனது இளமையில் தந்தையாரை இழந்தமையால் குடும்பபாரம் சுமந்து தாயின் உதவியுடன் தம் சகோதரிகளுக்கு ஏற்ற துணை தேடி ஆவன செய்து அரும்பணி புரிந்தார். இவர் தமக்குமோர் துணைதேடி தாயூராம் உரும்பராய் வித்துவான் சங்கரப்பிள்ளை செல்லைத்துரை, இரத்தினம் அம்மையார் அவர்களின் புத்திரி செல்வராஜேஸ்வரியை 7-2-1970ல் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக ஆற்றி தர்சினி, மதனு என்னும் இரு புத்திரிகளைப் பெற்றெடுத்தார். புதல்வியர் தொடர்ந்து கல்விகற்க ஆவன செய்து வாழ்ந்தார்.

இவர் இளமையிலேயே சமயபக்தியும் கடவுள் வழிபாடும் உடையவராகவும் திருத்தொண்டுகள் செய்வதில் ஆர்வமுடையவராகவும் வளர்ந்துவந்தார். நல்லூர்க்கந்தசுவாமி கோவில் திருப்பள்ளி எழுச்சி பள்ளியறைப் பூசைக்கு தினமும் வந்து வணங்கி வழிபாடு செய்வது அவரது ஆன்ம ஈடேற்றத்துக்கு அத்திவாரம் ஆயிற்று. நல்லூர்க் கந்தசாமி கோயில் திருவிழாக் காலத்திலே அன்பர்கள் அடியார்களுடன் சேர்ந்து சரியை வழிபாட்டிலே மிக உற்சாகமாகக் காணப்படுவார். தேர்த்திருவிழா அன்று நல்லூரான் தேரில் நன்கு ஆரோகணித்துவிதிவலம் வரும்பொழுது தேர் திரும்புவதற்கு வசதியாக தேர்ச்சில்லின் கீழ்வைக்கும் திருப்புக்கட்டையை மிகவும் சாவதானமாக வைத்துத் திருப்பும் பணியில் தம்மை அர்ப்பணிப்பதைக் காணலாம்.

திருவிழாக் காலத்தில் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தல் திருத்தொண்டு நடைபெறும். இத்திருத்தொண்டிலே இவர் இளமையிலிருந்தே தம் சிந்தனையைப் பதித்துவந்தார். தண்ணீர்ப்பந்தல் தொண்டு திருத்தொண்டர் வரிசையில் அப்பூதிநாயனர் செய்துவந்த பெருந்தொண்டு. அவரின் தொண்டின் திறத்தை திருநாவுக்கரசு நாயனர் கண்டு பாராட்டிப் பாடியருளினர். நாம் திருநாவுக்கரசு நாயனராகாவிட்டாலும் எம்முடன் கூடி 36 வருடகாலமாக பொன்னரியம் செய்த தண்ணீர்த் தாகசாந்தித் தொண்டைக் கண்டோம், கேட்டோம். அறிந்தோம். ஆனந்தமடைந்தோம். ஆகவே நாமும் அவர் பணியைப் பாராட்டுகின்றேம்.

உற்சவ காலத்தில் கோயிலிற் பணிசெய்யும் நேரமும் சுவாமி வீதி உலாவரும் நேரமும் தவிர்த்து பொன்னரியம் கோயில் முகப்புக்கு நேரே "ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தல்" அமைந்திருக்கு மிடத்தருகே முன் வாசலில் அமர்ந்திருந்து தண்ணீர்த் தாகம் தீர்த்துப்போகவிருப் போரை வழியனுப்பி, தண்ணீர்த்தாகம் தீர்க்கவருவோரை வழிபார்த்

திருப்பதைக் காணலாம். இவரோடு சேர்ந்து இப்பவியில் ஈடுபட்ட இளைஞர்கள் பெரியவர்கள் பலர் மெய்வருந்தம் பாராது நல்லமுறையில் திருத்தொண்டு செய்துகொண்டிருக்கிறார்கள்.

அன்பர் பொன்னரியம் உடல்நோயைக் குணப்படுத்த யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று அங்கு படுக்கையில் இருந்தபொழுது இராணுவத்தினரின் "ஷெல் குண்டு" அடியால் தாக்குண்டு 30-03-87 அதிகாலை 6-00 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்து அக்ஷய வருடம் பங்குனி மாதம் 16ந் திகதி திங்கட்கிழமை பூர்வபக்க பிரதமைத் திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சூரிய உதயத்தில் கந்தன் துணைமலர் கருத்தினிற் கொண்டு தன்னை அவருக்கு அர்ப்பணிக்க ஞானசக்தி வேலனும் தன் பக்தனைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். அவரின் ஜீவாத்துமா பரமாத்மாவுடன் கலந்துவிட்டது. அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தல் நிர்வாகிகளாகிய எங்களுக்கு மூத்தோனாக அவர் வேண்டிய ஆலோசனைகளைக் கூறியும் திருத்தொண்டுக்குத் தேவையான பொருளீட்டுவதற்கு எம்முடன் சேர்ந்து பொருள் உதவியும், சேகரித்தும் பந்தல் அமைப்பு, தண்ணீர் ஊற்றுதல் ஆகிய சேவைகள் பலவற்றிலும் முன்னின்று உழைத்தவர். எமக்கெல்லாம் சகோதரனாக, கடமையில் நண்பனாக, கண்ணியத்தின் காவலனாக கட்டுப்பாடமைந்த கடமை வீரனாகத் திகழ்ந்த உத்தமர். அவரது மறைவு எங்களுக்கு சொல்லற்கரிய பேரிழப்பாகும். அவரின் சேவையைப் பேணுதற்கு அவர் வழியில் "நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தல்" என்றும் நிலைக்குமாறு பணிசெய்ய ஒன்றிணைவோமாக.

வணக்கம்.

நிர்வாகிகள்
நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தல்

# திடீரென மறைந்துவிட்டீர்களே!

தாங்கள் எமது தந்தையை இழந்து துயர் உறும் வேளையில் எமது குடும்பத்தில் நீங்கள் எமக்கு அத்தாணுக வந்து, எமது தந்தைக்குச் சமமாக எமக்கு நல்லறிவு புகட்டி, நல்வழி காட்டி எம்மைச் சீரும் சிறப்பும் மிக்கவர்களாகத் திகழச்செய்து எம்மைவிட்டுத் திடீரென மறைந்து விட்டீர்களே! உங்கள் மறைவால் நாம் எல்லோரும் தாங்காத துயர் அடைகிறோம். நீங்கள் என்ன ஆசைகளை மனதில் எண்ணியுள்ளீர்களோ! அந்த ஆசைகளை நாம் எப்போ நிறைவேற்றுவோம்... உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லோரும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

காலஞ்சென்ற சங்கீதபூஷணம்
செல்லத்துரை தம்பதிகளின்
பிள்ளைகள்

உரும்பிராய்.

உ

சிவமயம்

# நல்லூர் முருகன் பாமலர்த் திரட்டு

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் — நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

தெளியுமே நின்சிந்தை செல்வ னருள்பொங்கி
வளியுமே வானவரும் தானவரும் — ஓயாமல்
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரின்
கந்தவெனச் சொல்லிக் கருது.

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றூள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப் — பெருத்த
மயிலிவரும் வேலா! விமலா! வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம்.

பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
நவமோங்கும் சாந்தம் பொறுமை — சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்தும் தீருமே
சினமு மடங்குமே தேர்.

தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமென
பாரறியச் சொன்ன பழங்கதையை — நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளிர் நலம்.

— யோகர்சுவாமிகள்

தனந்தா வழகு சடலந்தா வுலக சகலசுக
வினந்தா வெனவுன்னை வேண்டுகி லேனிரு தாள்மறவா
மனந்தா நல்லூர்க்கு வரும்வரந் தாவென்று வாழ்த்துகின்றேன்
வனந்தா வியபுன வள்ளிக்கு வாய்த்தநன் மாணிக்கமே.

— சோமசுந்தரப்புலவர்

ஆறு முகனீ அடியார்க்கு இரங்கியவர்
தேறு முறையருளுந் தெய்வதநீ — வேறுதுணை
இல்லேன் மிடியனைத்தும் இல்லார்க்கு வானமைந்தாய்
நல்லூர்ப் பதியி னமர்ந்து.

— சபாரத்தின முதலியார்

கண்டவர்கண் குளிரஇரு கைகள் தலைக்கேற
விண்டுளம்நின் றுருகமண்ணோர் விண்ணவர்கள் போற்ற
பண்டகுநல் மொழியாள்இரு பாக மகிழ்ந்துறையும்
தண்டலைசூழ் நல்லைவாழ்சிவ சண்முகனே சரணம்.

— பரமானந்தப் புலவர்

விண்ணளா வோங்குஞ் சித்திரம்
விளங்குங்கோ புரங்கள் பாரீர்
கண்ணகன் ஞாலம் போற்றும்
கடிமதில் அழகைப் பாரீர்
பண்ணமர் வண்டு பாடும்
பன்மலர்ச் சோலை பாரீர்
எண்ணரும் நல்லை வேலன்
இருக்குங்கோ யிலைப்பா ரீரே.

— பரமானந்தப்புலவர்

பொன்னுலக மன்னன் புகழ்ழ மண்டலஞ்சேர்
நன்னகர நாகரிக நல்லூரே — முன்னிலருங்
காற்படையான் பூத கணப்படையான் என்னையினி
மேற்படையான் மேவும் பதி.

— சேனாதிராய முதலியார்

வாடு நெஞ்ச மயக்க மறுத்தவர்
நாடு மெய்க்குரு நாதன் அருள்பெறக்
கேடில் செல்வமுங் கீர்த்தியு மிக்குறத்
தேடி நல்லைச் செழும்பதி சேர்மினே.

— சுவாமி விபுலானந்தர்

பொன்பூத்த மணிமுடிச் சிரமாறு மாறிரு
புயாசலமு மிது தண்ணளிப்
பூரண மதிக்கழகு தரும்வதன மாறுமம்
புயவிழிகள் பன்னி ரண்டும்
மன்பூத்த நிகமாக மக்கலை வடித்தமணி
வாயும்வெண் டரள நகையும்
வாய்ந்தபட் டுக்குநல மீந்தசிற் றிடையுமரி
மகளிரம ரிருபுறமு நின்
முன்பூத்த வருளினாற் பக்குவான் மாக்கட்கு
முத்தியருள் சுத்த வடியு
முந்துதே சோமயத் திருமேனி யுஞ்சத்தி
முதலியவு நீபத் தளித்

தென்பூத்த வுரமுங் கனவிலுமென் னெஞ்சிற்
றிருக்கிலுல வும்வகை யென்னோ
செருவல்ல சிகநேச கருவல்லல் வினைநாச
திருநல்லை முருகேசனே.

— சிவசம்புப்புலவர்

காலைதனில் மாலையிற் கட்டுச்சியிற் பெருங்
கவலைதரு நேரத் தினிற்
கனவிலுறு நனவினிற் கங்குலிற் பகலில்வெகு
காய்சினம் எழுந்த பொழுதில்
பாலயிலும் வேளையிற் சோறுணுங் காலையிற்
பசிகிடக் கும் வேளையிற்
பயமுற்ற நேரத்தில் இருமலில் தும்மலில்
பல்பிணி வருத்து பொழுதில்
காலனெதிர் வரவஞ்சி யோடிடுங் காலையிற்
களிமகிழ்வில் உறு துயரினில்
கந்தவுன் திருநாம மந்திரம் மறவாது
காதலொடு உரைக்க வரமீ
மாலையய னைச்சுரரை வாழ்வினில் இருத்துகுக
மாமுருக நல்லைநகர் வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக் கடவுளே.

— சோமசுந்தரப் புலவர்

அண்டா தவர்க்கும் அருள்கின்ற செவ்வேள் அமருநல்லைக்
கண்டா மணிக்கோ புரத்துக்குத் தெற்கினிற் கண்டுகொண்டேன்
தண்டா மரைமுக மாறும் சரணமும் தண்டையும் மால்
கொண்டா டும்வேலும் மயிலும் அடியவர் கூட்டமுமே.

— சோமசுந்தரப் புலவர்

எந்நாளு மெனைவருத் திடுவறுமை போக்கிநீ
யேர்கொணிலை வைப்ப தெந்நாள்
இரவுபகல் ஓயாது கவலையால் வாடுமென்
இருதயங் குளிர்வ தென்னாள்
துன்னூர்த மிடையூறு நீக்கியனு கூலநீ
துணையிலேற் கருள்வ தெந்நாள்
தொலையா வெனைநிதம் பீடிக்கு நோயறச்
சுகமதைத் தருவ தெந்நாள்
அஞ்ஞான திமிரமற நல்லறிவு கூட்டியே
அடியேனைக் காப்ப தெந்நாள்
அமரரொடு முனிவர்முதல் யாவரும் போற்றிநின்
றர்ச்சிக்கும் ஏக முதலே

மெய்ஞ்ஞான சுத்தியே நிதிபொழியு மேகமே
    விரவுசுக வெள்ள மேசீர்
மேயவிப் பாரிலே மிளிர்நல்லை யூரிலே
    விரவும்வேற் சத்தி தானே.

— மயில்வாகனப் புலவர்

மயில்மிசைத் தந்திப் பிடியொடு குறமான்
    மருவிட வருந்தனிக் கோலம்
அயின்றனர் பரவி அடியார்கள் எல்லாம்
    அரகர முழக்கெடுத் தலற
வியன்தரு நல்லைப் பெரும்பதி யதனில்
    வீற்றிருந் தருள்குும ரேசா
அயர்ந்தனன் அடியேன் வேண்டுவ முறைகே
    டாயினும் அளித்திடல் வேண்டும்

— சபாரத்தின முதலியார்

கற்பூரங் கொண்டுநற் பெண்மரு மைந்தருங் காதலரும்
அற்பூரு நெஞ்சொடு முன்வர வேதஞ்சொல் அந்தணர்தாம்
பொற்பூரு மன்பொடு பூமாரி தூர்த்திடப் பூங்குறிச்சி
வெற்பூரு மற்புதன் வந்தருள் வான்நல்லை வீதியிலே.

— தியாகராசபிள்ளை

அறுமுகமும் பன்னிருசெங் கரமும் வேலும்
    அபயவர தமுங்கடம்பின் அலங்கன்மார்பும்
குறுநகையுங் கருணைபொழி விழிமுந் நான்குங்
    குஞ்சரமான் மகளிருவர் குலவத்தோகை
பெறுமயில்மேல் அமர்ந்ததிருக் கோலம் என்றும்
    பிரியாதென் நெஞ்சினுள்ளே பேணுநிற் கும்
உறுவதெது வரினுமொளிர் வேற்க ரத்தான்
    உயிர்த்துணையாய் வருவனென வுளங்களித்தே.

மஞ்சுண்ட கோலமயி லுண்டுமிளிர் வேலுண்டு
    வளர்கின்ற வினைக ளைவையும்
வாழாது விட்டோட வுன்னெழுத் தாறுண்டு
    மகிமைபெறு நீறு முண்டு
நெஞ்சுண்டு வாயுண்டு நீயுண்டு நாளுண்டு
    நியமமதின் வழுவு முண்டோ
நீடித்த காலமா யென்குறை யியம்பியும்
    நெஞ்சிரங் காத தென்னே

தஞ்சமுன் னடியுன் டெனக்கொண்ட வேழைதன்
சஞ்சலந் தீர்த் தருளுவாய்
சரவண பவா!குகா! சண்முகா! நீபனே!
சாமி! சிவ காமிசேயே!
வஞ்சமுறு நெஞ்சினர்கள் பஞ்சமுறு செஞ்சரண
வடிவேல் கரக் குமரனே!
வாரண முழங்குவயல் சூழுநகர் நல்லைவளர்
வரகப்ர மணிய பொருளே.

— நெ. வை. செல்லையா

வளங்குலவு வருநல்லைத் திருப்பதியில் நிறைந்த
மாவொளியே வானவர்கள் வாழ்வுபெற நஞ்சைக்
களங்குலவக் கொண்டமரன் ஐம்முகமும் குன்றுக்
கன்னிதன தோர்முகமும் ஒன்றியெழி லோடு
மழங்குலவ ஆறுமுக மாகிவர வந்த
மாபதியே மாபதியாய் வந்தவிறை ஞானப்
பழங்குலவு நீயெனச் சொல் குகபரவெம் பாசப்
பகைகெடப்பார்த் தென்றனக்கு மெய்யருள்வைப்பதுவே.

— தில்லைநாதப்புலவர்

மண்ணிற் பிறப்பவர் வேண்டும் வரங்கள் மலர்ந்தளிக்க
எண்ணிய வேற்பெரு மானுறை கோவி லிதுவெனவே
கண்ணிற் கழகு தருங்கோபுரமுங் கனைமணியும்
விண்ணிற் குணர்த்துநல் லைப்பதி காண விரைமனமே.

— மு. செல்லையா

திருந்து மாரங் கண்டிகை கந்தை திருநீறும்
திகழ்திருநாமம் பொலிவுடனேதிடு திகழ்வாயும்
அருந்து முள்ளம் வண்பத நாடிடு வழிபாடும்
வைய மீதில் இனிப்பிற வாத வகைகோரும்
பொருந்து மன்பர் அகலிட மேவிய பெருமானுர்
புகழ்ந்து சேயென் றருளிய ஞானப் புதல்வோனே
வருந்து மென்றன் துயர்கெட மயில்மிசை வரவேணும்
மகிழ்ந்து நல்லைத் திருநகர் மேவிய பெருமானே.

— நாகலிங்கபிள்ளை

அன்புபொருந் தடியவர்கள் வாழி வாழி
அழகியநல் லேச்சனங்கள் வாழி வாழி
பொன்புரளு மஞ்ஞைஞக் குடமும் வாழி
புகழ்தெய்வ குஞ்சரியும் குறமின் வாழி
துன்புதவிர் வீரவேல் வாழி வாழி
சொல்லு மற்று மாயுதங்கள் வாழி வாழி
நன்குதரும் நல்லை நகர்க் கந்தர் வாழி
நாதாந்த வேலவரெந் நாளும் வாழி.

— சேஞதிராய முதலியார்

அருணவிக சிதகமல மலரை நிகர் தருவதன
  மாறுமறு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவர்
  னருண் முநகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி னெடுவலிய
  கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடிய வயில்
  கரதலத் தினிது வாழி
வருணமர கதவழகு திகழவரு மவுணனெனு
  மயிலினெடு சேவல் வாழி
வனசரந்த மரசனுத வியகுளமி னெடுகடவுள்
  மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனமரர் பணிநல்லை யமர்கந்தர்
  தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
  சடாட்சரம் வாழி வாழி.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

க. சி. கு.



# நன்றி நவிலல்

அன்பின் உருவமாய்த் திகழ்ந்து நல்வழிகாட்டி எம்மை வழிநடத்திய எம் அன்புக்குரியவரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எம் உளம்கனிந்த நன்றி.

மேலும் இந்த நினைவுமலரை வெளியிட்டு எம் அன்புக்குரியவரைக் கௌரவித்தமைக்காக ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தல் நிர்வாகிகளுக்கும் எம் மனமார்ந்த நன்றி.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள்,
மைத்துனிமார்கள்.

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002